1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதே பண்டகசாலையில் முதலில் கையாடல் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுவது 2,405 ரூபாய். மீண்டும் பரிசீலனை செய்ததில் 74,211 ரூபாய் என்ற அளவுக்கு மேலும் மோசடி செய்யப்பட்டிருப் பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 2,400 ரூபாயைக் கட்டிவிட்டால் மோசடி செய்தவர்களை விட்டுவிட முடியாது.

New buses on express bus routes

* 354 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state the number of express buses that have been replaced by new ones during the years 1971–72 and 1972–73?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பழைய விரைவுப் பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்ட புதிய விரைவுப் பேருந்து களின் எண்ணிக்கை 1971-72-ம் ஆண்டில் 81-ம், 1972-73-ம் ஆண்டில் 54-ம் ஆகும்.

திரு. என். கே. பழனிசாமி : வாங்கக்கூடிய புதிய பஸ்கள் எல்லாம் அதிக தூரம் செல்லக்கூடிய ரூட்டுகளில் விடப்படுகின்றன. அதனால் பெரிய அளவில் நகரங்களில் ஓடக்கூடிய பஸ்கள் அடிக்கடி அங்கங்கே நின்றுவிடுகின்றன பழுதுபட்டு. எக்ஸ்பிரஸ் பஸ்களும் நின்று விடுகின்றன. அப்படி இருக்கும்போது போன வருஷத்தை விட இந்த வருஷம் புதிய பஸ்கள் வாங்கும் எண்ணிக்கையை குறைத்துவிட்டதற்கு என்ன காரணம் என்பதை அறிவிப்பார் களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நெடுந் தூரம் செல்லுகின்ற விரைவுப் பேருந்து வழித் தடங்களில் புதிய பேருந்துகளை விடவேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. காரணம் பழைய பேருந்துகளை விட்டால் ஒருவேளை பழுது ஏற் பட்டு விடலாம் என்ற எண்ணம். ஆகவே, அரசின் முடிவுப்படி இரண்டு ஆண்டுகள் புதிய பஸ்கள் நெடுந்தூர விரைவு பேருந்து களாக விடப்பட்டு, அதற்குப் பின்னால் அவை மாவட்ட அளவிலும், மற்ற குறைந்த தூர வழித் தடங்களிலும் விடப்படுகின்றன.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, பொதுவாக நம்முடைய போக்குவரத்துத் துறையில் இப்போது நல்ல முன் னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில குறைபாடுகள்

இருக்கின்றன. சில பஸ்களில் ஸ்டெப்னி இருக்கிறது; ஜாக்கி இருக்கிறது; ஆனால் 'வீல் ஸ்பானர்'—டயரைக் கழற்றக்கூடிய சாதனம் இல்லை. கடந்த வாரம் தூத்துக்குடியிலிருந்து மதுரைக்கு வந்துகொண்டிருந்த ஒரு பேருந்தில் 'வீல் ஸ்பானர்' மட்டும் இல்லாததால் இரண்டு மணி நேரம் வழியிலே நிற்கவேண்டி வந்தது. ஒரு டயர் பஞ்சர் ஆகிவிட்டது. வீல் ஸ்பானர் இல்லாததால் அதைக் கழற்றி மாற்ற முடியவில்லை. அதனால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. எனவே, பழுது பார்ப்பதற்குரிய எல்லா சாதனங்களையும் பஸ்சில் வைத்திருக்கச் செய்து, இந்த மாதிரியான சிறிய சிறிய குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவாவர்களே, இங்கொன்றும் அங்கொன்றுமாக இத்தகைய சிறு குறைபாடுகள் அரசின் கவனத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. அதனால் நீண்ட தூர விரைவுப் பேருந்துகளை சரியாகப் பராமரிப்பதற்காக—முழுக் கவனம் செலுத்தக்கூடிய வகையில் அதற்கென்று தனியாக ஒரு வாரியத்தை அமைக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

புன்னப்பாக்கத்திற்குப் பேருந்துப் பணி

*** 355 வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 101-ஏ பேருந்தினை திருவள்ளூர் வட்டம், புன்னப்பாக்கம் கிராமம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பினை நிறைவேற்றுவதில் மேலும் காலதாமதம் ஏன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புன்னப்பாக்கத்திற்குச் செல்லும் சாலையின் மேற்பரப்பு சமமற்றதாய் இருப்பதோடு, அச்சாலையில் திடீரெனத் திரும்புகிற இரண்டு குறுகிய வளைவுகளும் உள்ளன. மேலும் இரு வழிகளிலும் பேருந்துகள் போய் வருவதற்கேற்றவாறு இச்சாலை போதுமான அளவு அகலமானதாக இல்லை.

*** 356 வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண். 98-ஐ, திருவள்ளூர் வட்டம், புன்னப்பாக்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?